

சென்னை நகரில் கடல் வாழ் உயிரினங்கள் கண்காட்சி அமைப்பது குறித்து ஆஸ்திரேலிய நிபுணர் குழுவினர் தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதியுடன் ஆலோசனை நடத்திய போது எடுத்த படம். மீன் வளத்துறை அமைச்சர் ஜெனிபர் சந்திரன், தலைமைச் செயலாளர் ஹரிபாஸ்கர் ஆகியோர் அருகில் உள்ளனர்.

### சென்னை நகரில்

# ரூ. 60 கோடியில் கடல்வாழ் உயிரினங்கள் கண்காட்சி

## கருணாநிதியுடன் ஆஸ்திரேலிய நிறுவனம் ஆலோசனை

சென்னை, மே. 25-

சென்னை நகரில் ரூ.60 கோடி செலவில் கடல் வாழ் உயிரினங்கள் கண்காட்சி அமைப்பது குறித்து ஆஸ்திரேலிய நிறுவனத்தை சேர்ந்த நிபுணர்கள் தமிழக முதல்- அமைச்சர் கருணாநிதியை சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

**கண்காட்சி**

ஆஸ்திரேலியாவை சேர்ந்த 'ஸ்டுடியோ பெர்த்' நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கோர்டன் குரோதர் தலைமையில் 4 பேர் கொண்ட குழுவினர் சென்னை வந்துள்ளனர். சென்னை நகரில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் கடல் வாழ் உயிரினங்கள் கண்காட்சி அமைக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ரூ.60 கோடி செலவில் அமைக்கப்படும் இந்த உயிரினங்கள் கண்காட்சி கடல்வாழ் உயிரினங்கள் சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தவும் பயன்படும்.

இந்த துறையில் அனுபவம் உள்ள ஆஸ்திரேலிய நிறுவனம் சர்வதேச அளவில் 20 இடங்களில் இதுபோன்ற கண்காட்சியை நடத்தி வருகிறது.

**கருணாநிதியுடன் சந்திப்பு**

ஆஸ்திரேலிய நிறுவனத்தின் தொழில் அதிபர் கோர்டன் குரோதர் மற்றும் அதன் நிர்வாகிகள் நேற்று சென்னை கோட்டையில் இது சம்பந்தமாக தமிழக முதல்- அமைச்சர் கருணாநிதியை சந்தித்து பேசினார்கள். தமிழக அரசுடன் கூட்டு சேர்ந்து ஆஸ்திரேலிய நிறுவனம் இந்த கண்காட்சியை அமைக்க தயாராக இருக்கிறது என்று ஆஸ்திரேலிய நிபுணர்கள் தெரிவித்தனர். தமிழக முதல்- அமைச்சர் கருணாநிதி அவர்களிடம் பேசுகையில், இந்த திட்டத்தை வரவேற்பதாக தெரிவித்தார்.

தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஜெனிபர் சந்திரன், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ஹரிபாஸ்கர் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.